

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (27.12.2023) முகாம் அலுவலகத்தில், அகில இந்திய இரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவரும், தென்னக இரயில்வே மஸ்தூர் யூனியன் பொதுச் செயலாளருமான டாக்டர் ந. கண்ணையா அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தென்னக இரயில்வே தொழிலாளர்கள் சார்பாக 75 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் இந்து மஸ்தூர் சபா அகில இந்திய தலைவரும் தென்னக இரயில்வே மஸ்தூர் யூனியன் தலைவருமான சி.ஏ. ராஜா ஸ்ரீதர் உள்ளார்.

## "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவளவிழா ஆண்டு"

## புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் இரண்டாம் கட்டமாக வழங்கல்!



சென்னை, டிச. 28-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவளவிழா ஆண்டின்" புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் இரண்டாம் கட்டமாக வழங்கும் பணியினை நேற்று (27.12.2023) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின், தலைமைக் கழக துணை மேலாளர் என்.ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார். அதுபோது, அரியலூர் மாவட்டச் செயலாளரும் போக்குவரத்துத் துறை அமைச்சருமான எஸ்.எஸ்.சிவசங்கர், தனது மாவட்டத்திற்கான உறுப்பினர் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டார்.

அதைப்போலவே, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட உறுப்பினர் சீட்டுகளை, மாவட்டச் செயலாளர் பரிந்துரையின் பேரில் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டேம் டி.வெங்கடேசன் பெற்றுக் கொண்டார்.

### அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் நேரில் ஆய்வு!

# தென்காசி மாவட்டத்தில் அதிகனமழை: பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட பயிர்ச் சேதம்!

### ஆட்சியர் துரை.ரவிச்சந்திரன் - ஈ.ராஜா - வே.ஜெயபாலன் - தனுஷ் எம்.குமார் முன்னிலையில்!

தென்காசி, டிச.28-

தென்காசி மாவட்டத்தில் கடந்த 17.12.2023,18.12.2023 ஆகிய இரு தினங்களில் பெய்த அதி கனமழையின் காரணமாக பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட பயிர்ச் சேதத்தினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மாவட்ட ஆட்சியர் துரை. ரவிச்சந்திரன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம் குமார் எம்.பி.ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வுப் பணி மேற்கொண்டார்.

பின்னர் அமைச்சர் கே.கே. எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்ததாவது:-

நமது மாவட்டத்தில் இது வரை 228 கிராமம் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. சுமார் 16 கோடி ரூபாய் மதிப்பிலான 18.077 ஹெக்டேர் அளவிலான பயிர்கள் சேதம் அடைந்ததுள்ளது. 5 ஆடு, மாடுகள் மற்றும் 4800 கோழிகள் உயிரிழந்துள்ளது.முழுமையாக 92 வீடுகளும்,200 வீடுகள் பகுதியாகவும் இடிந்துள்ளது.

முதலமைச்சர் அவர்கள் தென்காசி மாவட்டத்தில் எந்த ஒரு விவசாய நிலங்களும் கணக்கெடுப்பில் விடுபடாமல் இருக்க உத்தர விட்டுள்ளார். எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்று அதன் அடிப்படையில் உரிய நிவாரணம் அளிக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து சங்கரன் கோவில் ஆதிதிராவிட சமுதாய நலக்கூடத்தில் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் 300 பயனாளிகளுக்கு 5 கிலோ அரிசி, காய்கறிகள், போர்வை உள்ளிட்ட நிவாரண பொருட்களை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் வழங்கினார்.

முன்னதாக அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட சாயமலை பகுதியில் பயிற்சி சேதங்களையும், மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களையும் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் வேளாண்மைதுறை இணை இயக்குனர் பத்மாவதி, சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் சுப்பு லட்சுமி, நகர்மன்ற தலைவர்கள் உமா மகேஸ்வரி (சங்கரன்கோவில்) விஜயா (புளியங்குடி)ஒன்றியக் குழுத் தலைவர் லாலா சங்கர பாண்டியன், மாவட்ட பொருளாளர் சரவணன், ஒன்றியச் செயலாளர்கள் பெரிய துரை, பூசைபாண்டியன், ராமச்சந்திரன், நகரச் செயலாளர்கள் பிரகாஷ் (சங்கரன் கோவில்) அந்தோணி சாமி(புளியங்குடி) சங்கரன் கோவில் நகர்மன்ற ஆணையாளர் சபாநாயகம் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் துரை. ரவிச்சந்திரன், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன், தனுசு எம். குமார் எம்.பி. மாவட்ட துணைச் செயலாளர்கள் தமிழ்ச்செல்வி, கென்னடி, ஒன்றிய செயலாளர்கள் ஜெயக்குமார், மகேஷ் மாயவன் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செட்டிகுளம் ஊராட்சி, அரசு உயர் நிலைப்பள்ளியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றார். உடன் வருவாய் கோட்டாட்சியர் உள்ளார்.


